[திரு. பி.கே. சேகர்பாபு] [2023 ஏப்ரல் 17

துறையின் கட்டடங்கள் மற்றும் நிலங்களைப் பயன்படுத்தி, அதிக அளவு பொருளாதார ரீதியாக வருமானம் பார்த்துக்கொண்டு, திருக்கோயிலுக்கு முறையாகச் செலுத்த வேண்டிய வாடகையை செலுத்தாதவர்களிடம் அழுத்தம் கொடுத்து அவர்களிடமிருந்து வாடகை வசூலிக்கப்படுகிறது.

முற்பகல் 11–50

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் நாகைமாலி அவர்கள் சொன்னதுபோல, குடியிருப்பில் இருப்பவர்களிடம் எந்தவிதமான பாரபட்சமோ, வாடகை வசூல் செய்ய வேண்டுமென்ற நோக்கமோ இல்லை. அவர்கள் செலுத்தவேண்டிய வாடகைக் கட்டணத்தைத் தெரிவித்து, அதைத்தான் பெற்றுக் கொண்டிருக்கிறோம். மீண்டும், மீண்டும் சொல்கிறேன், வறுமைக் கோட்டிற்குக் கீழேயிருப்பவர்கள், தங்களால் அதிகளவில் வாடகை கொடுத்து தனியார் இடங்களில் குடியிருக்க முடியாதவர்களுக்கு பாதுகாப்பான அரணாக இருக்கவேண்டுமென்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் எங்களை வலியுறுத்தியதன்படி, இந்து சமய அறநிலையத் துறை செயல்படுகிறது என்பதைச் சொல்லி, இவற்றையெல்லாம் சீர்படுத்துவதற்கு ஒரு Fair Rent Committee-ஐ மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையில் உருவாக்கியிருக்கின்றார். அந்த Committee பல்வேறு வகைகளில் கிட்டத்தட்ட 8 மாத காலமாக, முழுவதுமாக ஆய்வு செய்துகொண்டிருக்கின்றது. வெகுவிரைவில் Fair Rent Committee முடிவின்படி இந்த வாடகை, ஏற்ற இறக்க பிரச்சினையை ஒரு முடிவுக்குக் கொண்டுவர மாண்புமிகு முதல்வர் அவர்கள் திட்டமிட்டிருக்கிறார் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

4. அறிக்கைகள் அளித்தல்

(அ) மதிப்பீட்டுக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் முனைவர் T.R.B. ராஜா, மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் அவர்கள்.

2023 ஏப்ரல் 17]

முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2021–2023 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவின் 6 முதல் 13 வரையிலான 8 அறிக்கைகளை குழுவின் சார்பாக இப்பேரவைக்கு அளிக்கின்றேன்.*

(ஆ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை, பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் அவர்கள்.

திரு. கு. செல்வபெருந்தகை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2021–2023 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் 83 முதல் 105 வரையிலான 23 அறிக்கைகளை குழுவின் சார்பாக இப்பேரவைக்கு அளிக்கின்றேன்.*

(இ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. S.R. இராஜா, பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர் அவர்கள்.

திரு. S.R. இராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2021–2023 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் 40 முதல் 67 வரையிலான 28 அறிக்கைகளை குழுவின் சார்பாக இப்பேரவைக்கு அளிக்கின்றேன்.*

(ஈ) சட்ட விதிகள் ஆய்வுக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன், சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் தலைவர் அவர்கள்.

திரு. இரா. இராஜேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2021–2023 ஆம் ஆண்டிற்கான சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் 7–வது அறிக்கையை குழுவின் சார்பாக இப்பேரவைக்கு அளிக்கின்றேன்.*